இன்று காலை என்றும் போல் இல்லை
இதயம் இடியை தாங்கிடுமோ
இன்று காலை விடியவே இல்லை
விடையம் அறிந்தே அழுகிறதோ
என்றும் சிரித்த முகமே எங்கள் கண்ணீர் முகங்கள் காணாயோ
என்றும் அமைதியின் குரலே எம் ஓலங்கள் உன்னைச் சேராதோ

இன்று காலை என்றும் போல் இல்லை
இதயம் இடியை தாங்கிடுமோ
இன்று காலை விடியவே இல்லை
விடையம் அறிந்தே அழுகிறதோ

உலகெங்கும் நீதான் ஈழத்தின் பாலம்
எந்தவழி சென்றாய் உன் மக்கள் பாவம் 2
தீக்கொள்ளும் புவாய் நீ தானே ஆனாய்
பனி கரையும் வேளை ஏன் எங்கோடிப் போனாய் 2
தலைவனின் நிழலாய் நின்றாய் இருளோடு என்மறைந்தாய் 2

இன்று காலை என்றும் போல் இல்லை
இதயம் இடியை தாங்கிடுமோ
இன்று காலை விடியவே இல்லை
விடையம் அறிந்தே அழுகிறதோ
என்றும் சிரித்த முகமே எங்கள் கண்ணீர் முகங்கள் காணாயோ
என்றும் அமைதியின் குரலே எம் ஓலங்கள் உன்னைச் சேராதோ